25.06.2026

OS. No. **393/2024**

**வா.சா.1 –** திரு. முருகவேல் த/பெ. கலியபெருமாள்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :-**

நான் தற்போது பூவாளூர், பின்னவாசல் கதவு எண். 33 ல் வசிக்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 3 ஆகிய ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. நான் 12.08.2024 ல் வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றேன். அந்த அறிவிப்பிற்கு நான் இன்று வரை எந்த ஒரு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் யார் என்று தெரியாத காரணத்தினால் பதில் அனுப்பாமல் இருந்து விட்டேன். இந்த நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வக்காலத்தில் உள்ளது எனது கையொப்பம் கிடையாது. இந்த வழக்கில் வாதி தரத்தில் இரண்டாவது சாட்சியாக விசாரிக்கப்பட்ட பிரபாகரன் எனது நண்பர் ஆவார். அவருக்கும் எனக்கும் எந்த வித விரோதமும் கிடையாது. ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்த ஆவணமானது கிரைய ஒப்பந்தமானது எனக்கும் பிரபாகரனுக்கு இடையில் ஏற்பட்டது ஆகும் அது சரிதான். அந்த ஆவணத்தில் யார் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறார்கள் என்றால் குணசேகரன் தான் சாட்சியாக கையொப்பம் செய்து இருக்கிறார். நான் சொல்லும் ஒப்பந்தம் எத்தனை ரூபாய்க்கு ஏற்பட்டது என்றால் எனக்கும் பிரபாகரனுக்கும் இடையில் அதிகமான வரவு செலவு நடைபெற்றதால் அதனால் எழுதி கொடுத்தேன். எவ்வளவு ரூபாய்க்கு அந்த ஆவணம் எழுதி கொடுத்தேன் என்றால் ( சாட்சி பதில் அளிக்கவில்லை ). அந்த

ஆவணத்தில் எனது முன் கடனை தீர்க்கும் செலவிற்காக என எழுதப்பட்டு இருக்கிறதா என்றால் அவ்வாறு எழுதப்படவில்லை. அந்த ஆவணத்தில் தொகை ரூபாய் 23 லட்சம் என எழுதப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. அந்த ஆவணமும் இதே சொத்தை பொறுத்து தான் ஏற்பட்டதாக காணப்பட்டு இருக்கிறது என்றால் இல்லை. அந்த ஆவணம் எந்த சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்டது என்றால் அவருக்கும் எனக்கும் வரவு செலவு உண்டு.எனக்கு தமிழ் படிக்க தெரியும். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் எதிர் வழக்குரையிலும் நான் யாருடனும் எந்தக் காலத்திலும் ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் கடந்த 30.12.2023 ல் பிரபாகரனுடன் நான் கிரைய ஒப்பந்தம் போட்டேன் என்று குறிப்பிட்டு இருக்கிறேனா என்றால் இல்லை. நான் Equitas Bank ல் எந்த வருடம்எவ்வளவு ரூபாய் கடன் வாங்கினேன் என்றால் ரூபாய் 5 லட்சம் கடன் வாங்கினேன் . நான் எப்போது கடன் வாங்கினேன் என்று நினைவில்லை . அந்தக் கடன் தொகை தற்போது வரை செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்து வருகிறது. அது ஆவண ஒப்படைப்பு பதிவு அடமானம் ஆகும். அந்தப் பதிவு செய்த ஆவணத்தில் இருக்கக்கூடிய எனது கையொப்பத்தையும் இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கக்கூடிய வா.சா.ஆ. 1 ஆகிய கிரைய ஒப்பந்த பத்திரத்தில் இருக்கக்கூடிய கையொப்பத்தையும் ஒப்பிட்டு பார்த்து அறிக்கை வருவதற்கு நான் எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை. பிரபாகரனுடன் செய்து கொண்டதாக சொல்லக் கூடிய ஒப்பந்தத்தில்

AVVe

செய்துகொண்ட தொகையை திருப்பி செலுத்தி விட்டேன் . நான் அவருக்கு எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்று நினைவில்லை. நான் டிரைவர் வேலை செய்து வருமானம் ஈட்டுகிறேன். நான் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20000 வரை சம்பாதிக்கிறேன். எனது சொந்த செலவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 15,000 வரை ஆகும். நான் Equitas Bank ல் வாங்கிய கடனுக்கு உரிய மாதாந்திர வட்டி தொகை மட்டும் ரூபாய் 15,000 என்றால் சரிதான். எனக்கு அதிகமான கடன் ஏற்பட்டது என்றும் அந்த கடனை திருப்பிச் செலுத்த இயலாத நிலை ஏற்பட்ட காரணத்தினால் வாதியுடன் வா.சா.ஆ. 1 ஆகிய கிரைய ஒப்பந்தபத்திரம் ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரி அல்ல. அந்த ஆவணத்தில் குறிப்பிட்ட தொகை முழுவதையும் நான் பெற்றுக் கொண்டு விட்டேன் என்றால் சரி அல்ல. வா.சா.ஆ. 1 கிரைய ஒப்பந்தத்திற்கு அனைத்து ஏற்பாடுகளையும் பிரபாகரன் தான் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் எனக்கு பாதி அவரது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்த பிறகும் நான் எந்தவித பதிலும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆகிய கிரைய ஒப்பந்த பத்திரத்தை நான் இதற்கு முன்பு எப்போது பார்த்தேன் என்றால் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு பார்த்தேன். அதை பார்த்த பிறகு தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டேன் என்றால் சரி தான். வா.சா.ஆ. 1 ஆகிய கிரைய ஒப்பந்த பத்திரத்தில் இருக்கக்கூடிய கையொப்பம் என்னுடையது என்றும் வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் அந்த ஆவணத்தை பார்க்கவில்லை என்றால் சரி அல்ல. குணசேகரன் என்ன காரணத்திற்காக என் மீது

வழக்கு போட வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . அது பற்றி நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். வாதிக்கு கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு போதிய பொருளாதார வசதி இருக்கிறது என்றும் அவர் விருப்பமாகவும் தயாராகவும் இருந்து வந்துள்ளார் என்றும் நான் உண்மைக்கு மாறாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

( ஓம்.), XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.